**தேதி - 29.11.2022 அசல் வழக்கு எண்.148/2010 பி.சா.3 (விஜயபாரதி)**

**29 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் சின்னப்பொண்ணு என்ற நாகரத்தினம் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து தான் செய்வார் என்பதை குறித்து நான் குறுக்குவிசாரணையில் கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் நாகரத்தினம் என்பவர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் மேற்படி கையெழுத்து என்னுடைய தாயாரின் கையெழுத்து அல்ல. மேற்படி கையெழுத்து என்னுடைய தாயாரின் கையெழுத்து அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் சட்ட நிபுணரிடம் கருத்துரை பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பி.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் டி ஷெடியூல் சொத்து திருப்பதி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா 6, 7 லக்கச் சொத்துக்களில் தற்போது 3 ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தின்படி தாவாச் சொத்துக்கள் உள்ளடக்கிய அனைத்து சொத்துக்களும் பாகம் பிரிக்கப்பட்ட அதனடிப்படையில் தான் தாவா 6, 7 லக்கச் சொத்துக்களை 3 ம் பிரதிவாதி அனுபவித்து குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் என்னுடைய தாயாரும் கையெழுத்து செய்துள்ளார் என்றும், தற்போது வழக்கிற்காக சின்னப்பொண்ணு என்ற நாகரத்தினம் கையெழுத்து செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 6, 7 லக்கச் சொத்துக்களின் பொதுசுவரும், 29 ம் பிரதிவாதியாக காண்பிக்கப்பட்டுள்ள செல்லமணி என்பவருடைய சுவரும் பொதுவாகத் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா 6, 7 லக்கச் சொத்துக்கள் 3 ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என்பதாலும், 29 ம் பிரதிவாதியின் சுவரும், 3 ம் பிரதிவாதியின் தாவா 6, 7 லக்கச் சொத்துக்களும் பொதுவாக உள்ளதால் தாவா 6, 7 லக்கச் சொத்துக்களை 29 ம் பிரதிவாதி சரியான பிரதி பிரயோசனத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா 6, 7 லக்கச் சொத்துக்களுக்கு மொத்த விஸ்தீரணம் எனக்குத் தெரியாது. தாவா 6 ம் லக்கச் சொத்தில் 356.5 சதுரடி இடத்தை தான் 29 பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா 7 ம் லக்கச் சொத்தில் 295.5 சதுரடி இடத்தை தான் 29 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.1 ஆன பாகப்பத்திரத்தின் அடிப்படையில் பாகம் பிரித்ததால் தான் தாவா 6, 7 லக்கச் சொத்துக்களில் மொத்த விஸ்தீரணம் எனக்குத் தெரியவில்லை என்றும், பொதுவான அனுபவத்தில் இருந்தால்

தாவா 6,7 லக்கச் சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எனக்குத் தெரிய வாய்ப்பிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் குடிநீர் மற்றும் சொத்துவரி பெயர் மாற்றம் குறித்த மதுரை மாநகராட்சி அளித்துள்ள சான்றிதழில் முன்னாள் உரிமையாளர் பெயரான 3ம் பிரதிவாதி சிவசங்கரி பெயரும், பின்னிட்டு கிரையத்திற்கு பின்பு 29ம் பிரதிவாதி பெயரிலும் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குடிநீர் மற்றும் சொத்துவரி பெயர் மாற்றம் குறித்த மதுரை மாநகராட்சி அளித்துள்ள சான்றிதழ் அசல்கள் **பி.சா.ஆ.29 மற்றும் 30**. பி.சா.ஆ.1 ஆன பாகப்பிரிவினை ஆவணத்தின்படி தாவா 6, 7 லக்கச் சொத்துக்களை 3ம் பிரதிவாதி தனித்த அனுபவம் செய்து வந்து பின்னிட்டு 29ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததால் தான் 29ம பிரதிவாதி பெயரில் மதுரை மாநகராட்சியால் குடிநீர் மற்றும் சொத்துவரி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் நன்கு தெரிந்தும், தற்போது வழக்கிற்காக பி.சா.ஆ.1 ஆன பாகப்பத்திரத்தை மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 29ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்த பிறகு தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. 29ம் பிரதிவாதி தாவா 6, 7லக்கச் சொத்துக்களை பொறுத்து சரியான பிரதி பிரயோசனத்தின் அடிப்படையில் 29ம் பிரதிவாதியை பொறுத்து வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்று சொன்னால் சரியல்ல.

<u>7, 13 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

பிராதில் கண்டுள்ள சொத்துக்கள் மொத்தம் எட்டு லக்கச் சொத்துக்கள் ஆகும். பிராதில் கண்டுள்ள சொத்துக்களில் ஒரு சில சொத்துக்கள் பூரவீக சொத்துக்கள், ஒரு சில சொத்துக்கள் கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். பிராது 8 லக்கச் சொத்துக்களில் 1 முதல் 6 மற்றும் 8 லக்கச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். 7வது லக்கச் சொத்து சுயசம்பாத்திய சொத்து ஆகும். தாவாச் சொத்துக்கள் நாகசோணைமுத்துக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். நாகசோணைமுத்துக்கு ராமலிங்கம்பிள்ளை, ஆறுமுகம்பிள்ளை ஆகியோர் வாரிசுகள் ஆவர். நாகசோணைமுத்து எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. 1970ம் வருடம் ராமலிங்கம்பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் பாகம் பிரித்துக் கொண்டார்கள். பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரமா அல்லது வாய்மொழியாக பிரித்துக கொண்டார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அப்படி பிரித்துக் கொண்டதில் ஆறுமுகம்பிள்ளைக்கு 12 லக்கச் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது. மேற்படி 12 லக்கச் சொத்துக்களில் 4 லக்க சொத்துக்களை ஆறுமுகம் பிள்ளையும் அவரது மகன்களும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால்

அதுபற்றி எனக்குத் தெரியாது. 4 லக்கச் சொத்துக்களை பொறுத்த ஆறுமுகம்பிள்ளையும், அவரது மகன்களும் சேர்ந்து கிரையம் செய்த சொத்துககளை பொறுத்து நான் பாகம் எதுவும் கோரவில்லை. ஆறுமுகம்பிள்ளையும் அவரது மகன்கள் கிரையம் செய்த நான்கு லகசுச் சொத்துக்களுக்கு என்னென்ன புலஎண், விஸ்தீரணம், எந்த புலஎண்ணில் உள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது. ஆறுமுகம்பிள்ளை 2006 ம் வருடம் இறந்தார். 1990 ம வருடம் ஆறுமுகம்பிள்ளையும், அவரது மகன்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அதில் ஒரு சில சொத்துக்களை விற்பனை செய்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு வாய்மொழியாக பாகம் செய்து கொண்டதில் 7 ம் பிரதிவாதியின் கணவர் நாகராஜன் என்பவருக்கு மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினையில் என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியாது. 7 ம் பிரதிவாதியின் கணவர் நாகராஜனுக்கு வாய்மொழியாக கிடைத்த பாக சொத்தில் என்னென்ன சொத்துக்களை விற்றார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தாத்தா ஆறுமுகம்பிள்ளை இறப்பதற்கு முன்பாகவே என்னுடைய தாயார் சின்னப்பொண்ணு என்ற நாகரத்தினம் 2005 ம் வருடம் இறந்துவிட்டார். என்னுடைய தாயார் இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளான நாங்கள் பாகப் பிரிவினை கேட்டு எந்தவிதமான வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை. வாய் மொழியான பாகப் பிரிவினையின்படி என்னுடைய தயார் என்னென்ன சொத்துக்கள் கேட்டார், அவருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.